மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை 25.10.2024 கதிர் 398

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



# இஸ்ரேலியரை இலக்கு வைத்தே அறுகம்பேயில் தாக்குதல் திட்டம்!

## விசாரணைகளில் திருப்பம் என்கிறார் பொலீஸ் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, அக். 26

**அறுகம்பே உட்பட நாட்டின் பல பகுதிகளில் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டதாகத் தகவல்கள் வெளியானாலும் இஸ்ரேலியரை இலக்கு வைத்தே இந்த தாக்குதல் திட்டமிப்பட்டதாகத் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**

**தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.**

இந்த தாக்குதல் திட்டத்தின் இலக்கு இஸ்ரேலியர் அல்லாத வெளிநாட்டவர்களோ, இலங்கையர்களோ இல்லை. நாட்டில் வேறு எந்த நாசகார செயலைச் செய்வதும் அவர்களின் நோக்கம் இல்லை எனத் தகவல் வெளியாகியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அந்த நிகழ்ச்சியில் இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், " தற்போது, தாக்குதல் திட்டம் தொடர்பில் மூன்று இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்காகத் தடுப்புக் காவல் உத்தரவைப் பொலீஸார் பெற்றுள்ளனர்.

அடுத்தடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். அந்தக் கைதுகள் மூலம்தான் இது தொடர்பாக கூடுதல் பாதுகாப்பை ஈடுபடுத்த வேண்டும் என்பது தெரியவந்தது.

அமெரிக்க தூதரகத்தின் அறிவிப்பு நேற்று முன் தினம் வெளியிடப்பட்டதற்கு முந்தைய நாள் இரவிலிருந்தே பொத்துவில் பொலிஸ் பகுதியில் பாதுகாப்பை நிலை நிறுத்தியிருந்தோம். பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர், இராணுவம் மற்றும் கடற்படையினர் கூட காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அறுகம்பேக்கு பயணம் செய்ய வேண்டாம் என்று அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. அதை தவிர, இலங்கைக்கு செல்ல வேண்டாம் என எந்த எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் யுத்த நிலைமை காரணமாக, இஸ்ரேலியர்களுக்கு இலங்கையில் மட்டுமல்ல, உலகில் எங்கும் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும்.

இது வேறு நாட்டில் உள்ள வெளிநாட்டவரை குறிவைத்தோ அல்லது இலங்கையர்களைக் குறிவைத்த அல்லது ஒரு நாசகார செயலோ அல்ல.இருப்பினும், இந்த தாக்குதலின் தன்மை குறித்து எந்த உறுதிப்படுத்தலும் இல்லை. தாக்குதல் திட்டம் தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே விசாரிக்கப்பட்டு சில விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் விளைவாக,மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கையர்கள். தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். விசாரணையின் பின்னர் சரியான தகவல்கள் வெளியாகியவுடன் அதனை ஊடகங்களுக்கு வழங்க முடியும்" என்றார்.

(ஐ)

## வடக்கு – கிழக்கு, தென் மகாணங்களை மையப்படுத்தி டிஜிட்டல் வலயங்கள் – பிரதமர் ஹரிணி தெரிவிப்பு!



கொழும்பு, அக். 25

யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு டிஜிட்டல் வலயங்களை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும், அரசாங்க சேவையை இலகுபடுத்துவதற்கும் வெளிப்படைத் தன்மையை உருவாக்குவதற்கும் அரசாங்கம் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப பட்டய நிறுவனத்தின் 26வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப தேசிய விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, தற்போதைய அரசாங்கம் நாட்டை டிஜிட்டல் மயமாக்குவதற்கான தெளிவான பார்வையை கொண்டுள்ளது.

தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துதல் மற்றும் டிஜிட்டல்

2➤

## குண்டுப் புரளியினால் தடங்கல் ஏற்பட்ட மட்டு. நீதிமன்ற நடவடிக்கை வழமைக்கு!

*செங்கலடி, அக். 25*

*மட்டக்களப்பு நீதிமன்றத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பியுள்ளன.*

*மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதியைக் குண்டு வைத்துத் தகர்த்தப் போவதாக நேற்றிரவு வந்த தொலைபேசி அழைப்பையடுத்து அந்தப் பகுதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் சுற்றுவட்டாரப்பகுதிகளில் சோதனையும் நடத்தப்பட்டது.*

*நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் எதுவும் இல்லை எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படை இன்றுகாலையில் உறுதிசெய்துள்ளது. அதனையடுத்து அந்தப் பகுதியில் குண்டு தாக்குதல் அச்சம் ஏதும் இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டதுடன், காலை 9.30 மணியளவில் நீதிமன்ற நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.*

*(இ–7)*




## தமிழ்த் தேசியத்திற்கு அர்த்தம் தெரியாதவர்கள் அபிலாசைகளை எவ்வாறு பெற்றுத் தருவார்கள்?

### ஈ.பி.டி.பி சிறீரங்கேஸ்வரன் கேள்வி!

யாழ்ப்பாணம், அக் 25

தேசியம் என்பதற்கான அர்த்தம் கூட தெரியாத நிலையில் தமிழ் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் இருப்பது

2➤

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெட்கக்கேடானது என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளரும் கட்சியின் ஊடக பேச்சாளருமான சிறீரங்கேஸ்வரன் இவ்வாறானவர்கள் தமிழ் மக்களது அபிலாசைகளை எவ்வாறு பெற்றுத்தருவார்கள் என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இந்த விஜயத்தின் போது அவர் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்புக்களின் போது இராஜாங்க செயலாளர் ஒற்றுமை என்று இதுவரை காலமும் பேசிவிட்டு ஏன் இவ்வாறு பிளவுபட்டு சிறுசிறு குழுக்களாக தேர்தலில் போட்டியிடுகின்றீர்கள்? தேசியம் என்றால் என்ன? போன்ற பல்வேறு வினாக்களை தமிழ் தரப்பினரிடம் எழுப்பியிருந்தார்.

தமிழ் அரசியல்வாதிகளால் அவரது கேளிவிக்கு உரிய பதிலை வழங்க முடியவில்லை. குறிப்பாகக் காலாகாலமாக தேசியம் என்ற சொல்லைத் திருப்பள்ளி எழுச்சி பாடல் போன்று அதிகாலையிலேயே தேசியத்தை உச்சரிப்பவர்களும் அதற்கான விளக்கத்தை வழுங்கியிருக்கவில்லை. அதுமட்டுமல்லாது அதற்கான அர்த்தமும் அவர்களுக்குத் தெரியாது.

தமிழ் மக்கள் இவர்களது நிலையை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறான பொறுப்பான கேள்வியை உள்ளூர் அரசியல் கட்சிகளோ, பிரமுகர்களோ இவர்களை நோக்கி கேட்டால் அவர்களை இந்த தரப்பினர் வசைபாடி வருவதே வழக்கமாக இருந்தது.

இராஜதந்திரி ஒருவர் இவ்வாறு கேட்டபோது அவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசியிருக்கின்றார்கள். 13 ஆவது அரசியலமைப்பிற்கும் தேசியத்திற்கும் என்ன தொடர்பு இருக்கின்றதென்று கூட அவர்களால் விளக்கமளிக்க முடியவில்லை. குறிப்பாக நாட்டையும் பாதுகாத்து, எமது மண்ணையும் பாதுகாத்து எமது மொழிமையும் மக்களையும் பாதுகாத்து எமது கலை காலாசாரங்களையும் பாதுகாத்து அதை உறுதிப்படுத்தவதென்பதே தமிழ் தேசியமெனலாம். இதைக்கூட அவர்களால் தெளிவுபடுத்த முடியவில்லை - என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதாரத்தை உருவாக்குதல் ஆகியவற்றின் அடிப்படையிலான கொள்கை நாட்டுக்கு தேவை. இதன்படி யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு டிஜிட்டல் வலயங்களை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

சர்வதேச டிஜிட்டல் நிறுவனம் மற்றும் தேசிய தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப கண்டுபிடிப்பாளர்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதும் அவசியமானது.

தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப கல்வியை கட்டியெழுப்புதல், அதற்கு தேவையான வசதிகளை வழுங்குதல், தொழிற்துறையாளர்களுக்கு தேவையான கொடுப்பனவுகளை வழங்குவதும் முக்கியமானது.

அதேபோன்று டிஜிட்டல் பிரிவில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதும் அவசியமாகும். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் எனத் தெரிவித்திருந்தார். (இ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# முட்டையின் விலையை குறைக்க இணக்கம்!



கொழும்பு, அக். 25

முட்டையின் விலை குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வந்த நிலையில், ஒரு முட்டையை 41 ஷரூபாவுக்கும் குறைவான சில்லறை விலையில் விற்பனை செய்யும் வகையில் முட்டைகளைச் சந்தைக்கு விநியோகிப்பதற்கு முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர்கள் இந்த இணக்கத்தை வெளிப்படுத்தியதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எம்.எம்.நைமுதீன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்ட அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, தற்போது சந்தையில் 45 ஷரூபாவிற்கும் குறைவான சில்லறை விலையில் முட்டையொன்று கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

தற்போது நாளொன்றுக்கு முட்டை உற்பத்தி 85,000 ஆக அதிகரித்துள்ளதாகவும், மொத்த விலையில் 35 மற்றும் 36 ஷரூபாவிற்கு ஒரு முட்டை பண்ணையிலிருந்து விடுவிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)



# மாத்தறையில் துப்பாக்கி தயாரித்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது!



மாத்தறை, அக் 25

மாத்தறை பாலட்டுவ பகுதியில் ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் தயாரிக்கப்படும் இடம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு துப்பாக்கி, 9 மில்லி மீற்றர் 05 ரவைகள், 01 வெல்டிங் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மாலிம்பட பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இவ்வாறு தயாரிக்கப்பட்ட 02 துப்பாக்கிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அஹுங்கம பொலிஸ் பிரிவில் விற்பனை செய்யப்பட்ட 02 துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேகநபர்களை மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அஹுங்கம பிரதேசத்தை சேர்ந்த 47 மற்றும் 54 வயதுடையவர்களாவர்.

சந்தேகநபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)




## எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி!

கொழும்பு, அக். 25

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. தேர்தலுக்குத் தேவையான உத்தியோகத்தர்கள், வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய பொருட்கள் அனைத்தும் உரிய நிலையங்களுக்கு இன்று எடுத்துச் செல்லப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

48 வாக்குச் சாவடிகளில் 55,643 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும், 2018ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின்படி வாக்குப்பதிவு நடைபெறும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாளை காலை 7.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்றும், தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் கண்காணிப்பு பணிகளுக்காக தமது அதிகாரிகளை ஈடுபடுத்த உள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ஐ)




## இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள முக்கிய அறிவிப்பு

கொழும்பு, அக். 25

*ரூ.145000 மில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 29 ஆம் திகதி ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.*

*இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக்காலத்தைக் கொண்ட 55000 மில்லியன் ஷரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 55000 மில்லியன் ஷரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையில் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 35000 மில்லியன் ஷரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது* (ஐ)

# முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் ஆரம்பகால நினைவுகள்

1974ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆந் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட 121/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியாகிய பிரகடனத்தின் மூலம் 1974 ஆவணி மாதம் முதலாம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக நிறுவப்பட்டது. பல்கலைக்கழக வளாகம் 1974ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 06ஆந் திகதி அப்போதைய பிரதமரான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் கே. கைலாசபதி வளாகத்தின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார். இலங்கையின் வடபகுதியில் ஒரு பல்கலைக்கழக



**மாணிக்கம் நடராஜசுந்தரம்**
**ஓய்வுநிலைப் பேராசிரியர்,**

வளாகம் நிறுவப்பட்டமை ஒரு வகையில் இலங்கைத் தமிழரின் ஒரு நீண்டகாலக் கல்வித் தேவையையும் இலட்சியத்தினையும் நிறைவு செய்வதாகக் காணப்பட்டது.

### வளர்ச்சிப்பாதையில்

சட்டபீடம் , உடற்கல்வி பீடம் இரண்டையும் நிறுவுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் ஆரம்பத்தில் விஞ்ஞான பீடம், மனித பண்பியற் பீடம் ஆகிய இரு பீடங்கள் மட்டுமே செயற்படலாயின. தேவையான நிர்வாக அலுவலகங்களும் மனித பண்பியற் பீடமும், அமரர் சேர் பொன் இராமநாதனால் தாபிக்கப்பட்ட முதன்மையான இந்துக் கல்வி நிறுவனமாகிய பரமேஸ்வராக் கல்லூரி வளவில் அமைந்தன. வளாகத்தின் மத்திய நிலையமாக இது விளங்கியது.

விஞ்ஞான பீடம் அமெரிக்க சமயப்பணி அமைப்புக்களால் 1821இல் நிறுவப்பட்ட முதன்மையான கிறீஸ்தவக் கல்வி நிறுவனமாகிய யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவர் பிரிவுக்கான வளாகத்தில் அமைந்தது. விஞ்ஞான பீடம் 1978 ஆனி மாதம் திருநெல்வேலி வளாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

மருத்துவ பீடம் 1978 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கைதடியிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடங்களில் தற்காலிகமாக இடம்பெற்றிருந்த மருத்துவ பீடம் திருநெல்வேலியிலுள்ள பிரதான வளாகத்துக்கு வடக்கே ஒரு கிலோமீற்றர் தொலைவிலமைந்த புதிய கட்டடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதன் விளைவாக உயர்கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1979 தைமாதம் 01ஆம் நாள் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றமடைந்தது.

காஞ்சென்ற பேராசிரியர் சு.வித்தியானந்தன் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகத்தில் அப்பொழுது மருத்துவம், விஞ்ஞானம், கலை மற்றும் விவசாயம் ஆகியவற்றுக்கான நான்கு பீடங்கள் இருந்தன. இவற்றில் விவசாய பீடம் கிளிநொச்சியில் அமைந்திருந்தது.

எந்திரவியற் பீடத்தை நிறுவுவதற்கு கொள்கையளவில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த பல்வேறு



பீடத்தின் அன்றைய தோற்றம்

பிரச்சனைகளால் செயற்பாடடைத் தொடரமுடியாமல் போய்விட்டது.

மருதனார்மடத்தில் அமைந்துள்ள நுண்கலைக்கழகம் (இராமநாதன் நுண்கலைக்கழகம்) கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவத்துறை என்பனவற்றையும் இணைத்து முழுவளர்ச்சி பெற்ற நிறுவனங்களாக தரமுயர்த்த எடுத்த முயற்சிகள் வெற்றியளித்து இன்று அவை தனித்தனி பீடங்களாக மிளிர்கின்றன.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தை அடுத்து

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழாவைக் கொண்டாடும் சமகாலத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் தனது 25 ஆவது வருட நிறைவில் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது. வெள்ளி விழா நிகழ்வுகள் ஒக்ரோபர் 26 ஆம் திகதி சனிக்கிழமை முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதனையொட்டி பீடத்தின் முதலாவது பீடாதிபதியும், ஓய்வுநிலைப் பேராசிரியருமான மா. நடராஜசுந்தரம் எழுதிய வரலாற்றுப் பார்வை இது.**

கொழும்பில் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலம் கற்பிக்கப்பட்ட வர்த்தகத்துறை மூடப்பட்டு யாழ் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் ஒரு துறையாக இருந்தது. பின்னர் காலப்போக்கில் முகாமைத்துவக் கற்கைநெறியும் மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தக முகாமைத்துவக் கற்கைகள் துறையாக பெயர் மாற்றம்செய்யப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் தொடர்ந்து இயங்கியது.

பேராசிரியர் சிவநாதன், பேராசிரியர் நித்தியானந்தன்,




பேராசிரியர் பாலக்கிருஸ்ணன் ஆகியோர் துறைத் தலைவர்களாகக் கடமையாற்றினார்கள். மீண்டும் பேராசிரியர் பாலக்கிருஸ்ணன் பங்குனி 14, 1991 இலிருந்து மூன்று வருடங்களுக்கு முகாமைத்துவக் கற்கைகள் துறைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். கலைப்பீடத்தின் பொருளியல்துறை மண்டபத்திலிருந்து, பல்கலைக்கழக பிரதான கட்டடத்திற்கு மாற்றப்பட்டோம்.

இருபக்கமும் நடைபாதையும் நான்கு பெரிய வகுப்பறைகளுடன் எங்கள் துறை ஆரம்பமானது. ஆனாலும் கலைப்பீடத்தின் கீழ் தான் செயற்பட்டு வந்தோம். 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட மோசமான உள்நாட்டுப் பிரச்சனைகளால், சுன்னாகத்திலிருந்த மின்பிறப்பாக்கி குண்டுவீசித் தகர்க்கப்பட்டது. யாழ் நகரம் முற்றாக இருளில் மூழ்கியது. பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்தன. போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்தன. துவிச்சக்கரவண்டி தான்



பீடத்தின் இன்றைய தோற்றம்

எமக்கு போக்குவரத்துக்கு உதவிகரமாக அமைந்தது.

எந்தநேரம் என்ன நடக்கும்?, எங்கு ஷெல் வந்து விழும்? என்ற பயத்துடன் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இலங்கைப் போக்குவரத்துச் சபை முற்றாகவே செயலிழந்திருந்தது. பாடசாலைக் கல்வியும், பல்கலைக்கழகக் கல்வியும் புறக்கணிக்கப்பட்டால் எமது பிரதேசம் சூனியப் பிரதேசமாக மாறலாமென்பது எமக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் பல்வேறு இடர்கள் மத்தியிலும் நாம் கல்வியையும், பல்கலைக்கழக விளையாட்டுக்களையும் தொடர்ந்து நடத்தினோம்.

1991ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டு வரை நானும் அமரர் பேராசிரியர் கணேசலிங்கம், அமரர் பேராசிரியர் துரைராஜா மற்றும் வங்கிகளில் தொழில் புரிபவர்கள் சிலரும் திங்கட்கிழமை காலை 4.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து பயணமாகுவோம். நாம் 5.30 மணிக்கு வல்லைவெளியைக் கடந்து விடுவோம். 6.30 மணிக்கு நான் பல்கலைக்கழகத்திற்கு வந்து, 8 மணிக்கு விரிவுரைகளை ஆரம்பிப்பேன்.

விரிவுரைகள் பெரும்பாலும் எல்லோருடைய உதவியுடன், தமிழிலும் ஒரு சிலருக்கு ஆங்கில மொழியிலும் நடைபெறும். மாணவர்களும் சிறப்பாகக் கற்றார்கள்.

எந்தக்கால கட்டத்திலும் துப்பாக்கியை ஏந்திய ஒருவரும் பல்கலைக்கழகத்தினுள் வரவில்லை, எந்தவிதமான சுவரொட்டிகளும் ஒட்டப்படவில்லை, கல்வியை ஊக்கமளித்தார்களே தவிர, தடையேற்படுத்தவில்லை.

அண்மைக்காலங்களில் இலங்கை அரசாங்கத்திலுள்ள கல்வியமைச்சர் இதனையொரு உதாரணமாகக் கொண்டு உரையாற்றியிருந்தார். மண்ணெண்ணெய், அரிசி, துவிச்சக்கரவண்டி யாவும் நியாயமான விலையில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவராகவிருந்த தனேந்திரன் ஆற்றிய சேவைகளை மறக்க முடியாது. அவருடைய முயற்சியால் தான் அருமையான பொருட்கள் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாகவிருந்தது. நான் வர்த்தகமும் முகாமைத்துவமும் துறையின் தலைவராக 1993ஆம் ஆண்டு பொறுப்பேற்றேன்.

1991ஃ1995 காலப்பகுதியில் துவிச்சக்கரவண்டியில் 60 கிலோமீற்றர்கள் ஒவ்வொரு நாளும் ஓடியிருக்கின்றேனென்றால் இந்தக் காலத்தவர்கள் நம்பமாட்டார்கள். திங்கட்கிழமை வந்தால் வியாழக்கிழமை திரும்பிச் செல்வோம். எல்லா வீடுகளிலும் மண்ணெண்ணெய் விளக்குகள்தான் எரியும். அதன் வெளிச்சத்தில்தான் வீடுகளில் இரவில் சிறுவர்கள் கல்விசார் விடயங்களை மேற்கொள்வார்கள்.

அப்போதைய துணைவேந்தர் காலஞ்சென்ற பேராசிரியர் துரைராஜாவின் முயற்சியால் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இரவுநேரத்தில் 10 மணிவரை மின்பிறப்பாக்கி மூலம் மின்சார வெளிச்ச வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மாணவர்கள் இதன் மூலம் மிகவும் நன்மை பெற்றிருந்தனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)


'எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை
'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை
'வெற்றி' எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்
X


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழில் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இதற்குப் பொறுப்பாக மாணவர் நலன்கருதி நானும் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜாவும் செயற்பட்டோம்.

ஒன்றாகச்செயற்பட்டுவந்த வர்த்தகமும்முகாமைத்துவக் கற்கைகள் துறையும் தனித்தனித் துறைகளாகப் பிரிக்கப்பட்டன. விரிவுரையாளர்களும் விருப்பத்தின் பேரில் விரும்பிய துறைகளுக்குப் பிரிக்கப்பட்டனர். நான் முகாமைத்துவக் கற்கைகள் துறைக்குத் தலைவராகவும் திரு. க. தேவராசா வர்த்தகத்துறைக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டோம். எவ்வாறாயினும், இரு துறைகளும் தொடர்ந்து கலைப் பீடத்திற்குக் கீழே தான் செயற்பட்டன. மாணவர்கள் அதிகளவிற்கு வர்தகத் துறைக்கும், முகாமைத்துவக் கற்கைகள் துறைக்கும் உள்வாங்கப்பட்டனர். இதன் விளைவாக விரிவுரையாளர்கள் தொகையும் அதிகரித்தது. அப்போதைய துணைவேந்தராக இருந்த பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையின் முயற்சியால் புதியதொரு பீடம் (முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிக பீடம்) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டது.

துணைவேந்தர் தலைமை தாங்கிய் 1999 முதல் ஆண்டு பேரவைக் கூட்டத்தில் நான் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டேன். அன்றைய தினம் மதியம் நான் வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமானதால் திரு. க. தேவராசா பதில் பீடாதிபதியாக ஒரு மாதகாலம் கடமையாற்றினார்.

### பீடத்தின் ஆரம்பம்

பீடம் ஆரம்பித்த பொழுது அந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஆரம்பித்த கல்வியாண்டுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். முகாமைத்துவக் கற்கைகள் துறையில் குறைவான மாணவர்களும் வர்த்தகத் துறைக்கு அதிக மாணவர்களும் கல்வி பயின்று வந்தார்கள். நான் வெளிநாட்டில் குறிப்பாக கனடா நாட்டில் மாணவர்களைச் சந்தித்த பொழுது தாங்கள் ஆங்கில மொழியில் கல்வியைக் கற்காதது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனக் கவலை தெரிவித்தனர். “இப்பொழுது நாளொன்றுக்கு 18 மணத்தியாலங்கள் ஆங்கிலம் கற்கின்றோம். நீங்கள் யாழப்பாணம் திரும்பியதும் ஆங்கில மொழியில் எங்களுடைய பாடநெறியை மாற்றிக் கற்பிக்கவும், நாங்கள், நீங்கள் பலதடவை கூறியும்அதனைப்புறக்கணித்ததன்விளைவை அனுபவிக்கின்றோம். அடுத்த சந்ததிக்கு ஆங்கிலத்தில் கற்பித்து நல்ல எதிர்காலத்தை உருவாக்குங்கள்” என ஒருமித்த குரலில் கேட்டுக் கொண்டார்கள்.

1999 ஆவணி மாதம் நான் யாழ்ப்பாணம் திரும்பி வந்ததும் பல்கலைக்கழக மூதவைக்கு என்னுடைய ஆதங்கத்தைப்பீடத்தின் அனுமதியுடன் ஆங்கில மொழியில் கற்பிக்கப்போகின்றோம் எனக்கூறி அங்கீகாரத்தைப் பெற்றோம். சகல பீடாதிபதிகளும் பேராசிரியர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். இருந்தாலும், பல்வேறு வகையான எதிர்ப்புக்களையும் நான் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. ஆசிரியர்கள் மௌனமாக இருந்தார்கள் எதிர்காலம் எவ்வாறிருக்குமென அவர்ளுக்கு விளங்கும். மாணவர்கள் மத்தியில் பெரும் சஞ்சலம் ஏற்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தில் முற்றாகப் படிக்க முடியாத சூழலில் இருந்தார்கள் : அத்தகையவர்கள் கவலையடைந்தனர். வெகுவிரைவில் நீங்கள் சுடப்படுவிர்கள் என்று ஒரு கடிதமும் என் கைக்கு வந்தது. அந்த நேரத்தில் நான் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பீடம் சார்ந்த முதல் கூட்டத்திற்கு சென்ற பொழுது, ஆங்கில மொழிமூலக் கற்பித்தலுக்கு பெரும் வரவேற்புக் கிடைத்தது. எமது பீடத்தை ஒரு உதாரணமாகக் கொண்டு சகல பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழிமூல கற்பித்தலுக்கு மாறுமாறு தீர்மானம் எடுக்கப்பட்டது. எமது பீடத்தின் தூரநோக்கு பலராலும் பாராட்டப்பட்டது. ஆயினும், மாணவர்கள் மத்தியில் பெரும் பய உணர்வு இருப்பதைக் காணமுடிந்தது. இதனாலேற்படும் நன்மைகள் பற்றித் தொடர்ச்சியாக விளக்கம் கொடுத்து வந்தோம். மீண்டுமொரு மாற்றத்தைக் கொண்டு வந்து மாணவர்களை சாந்தப்படுத்தினேன்.

முதலாவது ஆண்டில் இருமொழிக் கற்பித்தலுக்கான அங்கீகாரத்தை மூதவையிடம் பெற்று ஆங்கிலத்திலும் தமிழிலும் விடைகள் எழுதலாமெனவும் அல்லது இரு மொழிகளையும் கலந்து விடைகள் எழுத சந்தர்ப்பம் வழங்கினோம். நான் பீடாதிபதியாக இருந்த ஆறு வருடங்களும், முதலாம் ஆண்டுக்கு முகாமைத்துவம், வங்கியியல் பாடங்களை ஆங்கிலத்தில் இலகு நடையில் கற்பித்து, தமிழ்மொழி மூலம் விளக்கமளித்ததன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையை உருவாக்கினேன்.

மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று உள்ளே வருவதற்கு முன்பே ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கினார்கள். இதனால் நாம் வெற்றியடைந்து விட்டோம். ஆங்கில மொழி மூலம் கற்றவர்களுக்கு வெளி நாடு செல்வதற்கா ஐ.ஈ.எல்.ரீ.எஸ் பரீட்சையிலிருந்து விதிவலக்கு கிடைத்ததால் பலர் பரீட்சை முடிவுகள் வந்ததும், இங்கிலாந்து நாட்டிற்கு சென்று எம்.பீ.ஏ மேற படிப்புகளைத் மேற்கொள்ள சந்தர்ப்பம்கிடைத்தது. இத னால் பலர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

ஆங்கில மொழிமூலக் கற்பித்தல் நடைமுறையிலிருந்த பொழுது மறக்கமுடியாத சில சம்பவங்களில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் ஆங்கிலத்தில் படிக்க முடியாதெனக் கல்வியை இடைநிறுத்திச் சொந்த ஊருக்குப் போகப் கோகின்றேன் எனக் கவலையுடன் என்னுடன் கலந்துரையாடினார். அடுத்த நாள் என்னைக் கண்டதும் ஆங்கிலத்தில் ‘குட்மோர்னிங் சேர்’ என்றார். நான் அவரை அழைத்து ‘காலை வந்தனம்’ எனச் சொன்னேன். ‘ஆங்கிலம் கடினம் என்று கூறிப் படிப்பை நிறுத்தப் போகின்றேன் என நீர் நேற்றுக் கூறியது ஞாபகமிருக்கின்றது’ என்றேன்.

ஆவர் அப்பொழுது தான் உண்மையைக் கூறமுயன்றார். “நான் ஆங்கிலத்தில் கொஞ்சம் எழுதக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் சகமாணவர்கள் எனது விடையைப் பார்த்தால் பகிடி பண்ணுவார்கள் என்றார். ஒருவருடைய விடைத்தாளை இன்னொருவர் பார்க்க முடியாது, விரிவுரையாளருக்கு மட்டுமே தெரியுமெனக் கூறினேன். அத்துடன் அவர் மனநிலை மாறி ஆங்கிலத்தில் படித்து தற்போது நல்லதொரு தொழிலில் இருக்கின்றார்.

சாவகச்சேரியில் கார் வாடகைக்கு விடும் ஒருவர் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு எனது வீட்டிற்கு வந்தார். முதலாவது ஆண்டில் முகாமைத்துவக் கற்கைகள் துறையில் கல்வி பயிலும் அவர் ஆங்கில மொழி மூலக் கல்வி கடினமாக இருப்பதாகவும், கல்வியைக் கைவிடுவதற்குத் தீர்மானித்து விட்டதாகவும் கவலையுடன் கூறினார். உளரீதியாகப் பயப்படுகின்றாரென பிள்ளையுடன் கதைக்கும் பொழுது அறிந்து கொண்டேன்.

அடுத்த கிழமை தொடக்கம் விரிவுரைகளுக்கு முன்வரிசையில் இருக்குமாறு புத்திமதி கூறினேன். பிள்ளையும் அவ்வாறே செய்யத் தொடங்கியது. படிப்படியாகப் பிள்ளையிடம் முன்னேற்றத்தை அவதானித்தேன். பின்வரிசைகளில் இருப்பவர்களில் பலர் என்னைத் திட்டித் தீர்ப்பார்களாம். இதனால் இந்தப் பிள்ளைக்கும் பயம் ஏற்பட்டு நாங்கள் எல்லோரும் பரீட்சையில் சித்தியடைய மாட்டோம் என்ற எண்ணம் பிள்ளையை நிலைகுலையச் செய்தது. அந்தப் பிள்ளை தொடர்ந்து நன்றாகப் படித்து இரண்டாம் வகுப்பு மேற்தரத்தில் சித்தியடைந்தது. படிப்படியாக மாணவர்கள் மத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டு ஆங்கில மொழியிலேயே கற்கத் தொடங்கி விட்டனர். வெளிநாட்டில் மாத்திரமன்றி உள்நாட்டிலும் பல துறைகளிலும் வேலை வாய்ப்பினைப் பெறக்கூடிய அளவுக்கு தமது அறிவை வளர்த்துக் கொண்டனர். குறிப்பாக நிர்வாகத்துறை, வங்கித்துறை, கணக்காளர், கணக்காய்வாரள்கள், திட்டமிடல் துறை, ஆசிரியர்கள், குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்களில் நல்ல உயர் பதவிகளில் இருக்கின்றனர். வேலை செய்கின்ற சகல துறைகளிலும் சிறப்பாக இயங்கி வருகின்றார்கள்.

கனடா, இங்கிலாந்து நாடுகளுக்கு மீண்டும் 2007ஆம் ஆண்டு சென்ற பொழுது தற்செயலாக ஒரு உணவகத்தில் ஒரு மாணவனைச் சந்தித்தேன். கனடாவிலுள்ள பிரபல்யமான வங்கியில் உயர் அதிகாரியாக இருப்பதாகக் கூறி ஆங்கில மொழிமூலம் கல்வி கற்றதே என்னை இந்த நிலைக்குத் தன்னைக் கொண்டு சென்றதெனக் கண்ணீர் மல்கக் கூறி, அடுத்தநாள் நானிருக்குமிடத்துக்கு வந்து என்னை மதிய உணவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு வேறு சில மாணவர்களும் வந்திருந்தார்கள். அவருடைய மனைவி நீங்கள் தானே ‘நடா சேர்’? என்று கேட்டார்.

தங்களுடைய வீடடில் பல மாணவர்கள் ஒன்று கூடுவது வழக்கம். அப்பொழுது ‘நடா சேர்’ ஆங்கில மொழி மூல கற்கை முறையை அறிமுகப்படுத்திய பொழுது நாங்கள் எங்கள் அறையிலிருந்து எப்படியெல்லாம் அவரைத் திட்டித் தீர்த்தோம், ஆனால் இன்று நாங்கள் நல்ல நிலையிலிருப்பதற்கு அவருடைய தூரநோக்கும், எதிர்கால சவால்களும் உலக அரங்கில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணரச் செயதவர் என வாழ்த்துவார்கள் என்று அவருடைய மனைவி கூறினார். எங்கள் பல்கலைக்கழகத்தில் எமது பீடத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளில் பலர் வெளிநாடுகளில் இலகுவாக ஆங்கில மொழி மூலம் கலாநிதிப் பட்டங்க ளைப் பெற்று எங்கள் பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பலர் பேராசிரியர்களாகப் பதவியுயர்த்தப்பட்டு ஒவ்வொரு துறையிலும் இருக்கின்றார்கள்.

குறிப்பாக மூவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும், இத்துறைகளில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். எம்முடைய பீடத்திலிருந்து வெளியேறிய பலர் வவுனியாப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் (மட்டக்களப்பு), தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்) போன்றவற்றில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். எமது பீடம் பல இன்னல்களுக்கு மத்தியில் வளர்ந்து இன்று இலங்கையில் ஒரு உயர் பீடமாகப் பலராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது முக்கிய அம்சமாகும்.







பரந்தன் பகுதியில் டெங்கு நோய் பரவும் சூழலை இனங்கண்டு நுளம்புகளை இனங்காணும் நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட தொற்று நோய் பிரிவினரின் ஏற்பாட்டில் மாவட்டத் தொற்று நோய்ப் பிரிவு வைத்தியர் க.ரஞ்சன் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தொற்றுநோய் பிரிவின் சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.
(ஐ-113)

# முச்சக்கர வண்டி விபத்து சாரதி மருத்துவமனையில்




மன்னார்பு, அக். 25

மன்னார் மடு பிரமனாலங்குளம் பகுதியில் நேற்று (24) மாலை வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியை சேர்ந்த பாண் வியாபாரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி மீட்கப்பட்டு பிரமனாலங்குளம் பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியை சேர்ந்த பான் விற்பனை செய்யும் முச்சக்கர வண்டி பிரமனாலங்குளம் வழியாக மடு சென்ற போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அப்பகுதி பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# யாழில் மூன்று இளைஞர்கள் உயிரிழப்பு சோகத்தில் பிரதேசவாசிகள்



யாழ்ப்பாணம் , அக். 25

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியில் இளம் பாராளுமன்ற வேட்பாளர் தீடிரென உயிரிழந்த சம்பவம் துயரத்தைஏற்படுத்தியுள்ளது .

இதேவேளை யாழ் வடமராட்சி பகுதியில் மின்சாரம் தாக்கி சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் அதனால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக அடிக்கடி சுகயீனமுற்று வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது .

இந் நிலையில் நேற்றைய தினம் சுகயீனமுற்ற நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை 1:00 மணியளவில் உயிரிழந்துள்ளார்

நெல்லியடி செல்லமுத்துாஸ் புடவைக்கடையில் நீண்டகாலமாக பணிபுரிந்து வந்த கரவெட்டி கப்பூது பகுதியைச் சேர்ந்த மகேந்திரம் துசிகரன் வயது 34 என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார் மேலும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார் . பருத்தித்துறை கூவில் பகுதியைச் சேர்ந்த சிவதாஸ் வயது 26 என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். இந்நிலையில் அடுத்தடுத்து மூன்று இளைஞர்களின் தொடர் உயிரிழப்பு வடமராட்சி பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)






## இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

கொழும்பு, அக். 25

40 வயதைக் கடந்த நான்கு பேரில் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிப்புக்குள்ளாவதாக இலங்கை மருத்துவர் சங்கத்தின் உறுப்பினர் பேராசிரியர் வைத்தியர் மந்திக்க விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட புதிய ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் சுமார் 40 வயதுக்குட்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் 33 வீதமானவர்கள் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ; ஐஉெசநயளந ஐெ வுாந ரேஅடிநச ழுகைடிநவநளீயவைநெவெள ளுசை டுயமெய

நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் இதயம் தொடர்பான நோய்கள், கை, கால் நரம்புத் தளர்ச்சி, கண்பார்வையில் குறைபாடு போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதனால் பாதிப்புகள் அதிகமாகி சிறுநீரகங்களும் செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றது.

நீரிழிவுக்கான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ளும்படியும், உணவுப் பழக்கவழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மருத்துவர் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் மந்திக்க விஜேரட்ன தெரிவித்துள்ளார். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.10.2024இல் வெளியிடப்பெற்றது.